**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். DVC 13 /2025**

**வழக்கு சாட்சி. ம.சா.1**

மனுதாரர் தரப்பு **1 ஆவது சாட்சி தாஹீராபேகம் (எ) ஜெகஜோதி** என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி **Tmt.Sahanathirushya, Grade-III Bench clerk**, என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | தாஹீராபேகம் (எ) ஜெகஜோதி | **வயது** | : | 36 /2026 |
| **கணவர் பெயர்** | : | முகமது அக்லித் | **தாலுகா** | : | |
| **கிராமம்** | : | அறந்தாங்கி | **தொழில்** | : | |

**<u>நாள்: 11.03.2026</u>**

**<u>ம.சா.1</u>**

**முதல் விசாரணை:**

நான் இந்த மனுதாரர் தரப்பு **1 ஆவது சாட்சி ஆவேன்**. எனது முதல் விசாரணை சாட்சியத்தினை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் நான் சொன்னவைதான். எனது நிரூபண வாக்குமூலத்தினை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை **ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7** வரையான ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. மனுதாரர் **இஸ்லாம் மதத்தினை ஏற்றுக்கொண்டதற்கான சான்று நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. மனுதாரர், 1 ஆம் எதிர்மனுதாரர் மற்றும் 1 ஆம் எதிர்மனுதாரர் மூலம் பிறந்த குழந்தை முகமது அஜிஸ் ஆகியோர் சேர்ந்து எடுத்துக்கொண்ட **புகைப்படம் அசல் ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. திருமணத்தின்போது 1 ஆம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு சூட்டிய கருகமணி **புகைப்படம் அசல் ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4. குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொள்வதற்று ஒப்புதல் அளித்து மனுதாரரும், 1ஆம் எதிர்மனுதாரரும் கையொப்பம் செய்த **ஆவணம் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
5. மனுதாரர் மற்றும் அவரின் மகனின் **ஆதார் அட்டை நகல் எண்ணிக்கை–02 அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
6. மனுதாரரின் **குடும்ப அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. மனுதாரரின் மகனின் பிறப்புச்சான்று புகைப்பட நகல் **அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு** ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிர்மனுதாரர் தரப்பு நீதிமன்றத்தில் ஆஜராகாததால் ஒருதலைபட்சம் படுத்தப்பட்டுள்ளனர்.**

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஒம்/–எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**